

**சக்தி பௌண்டேஷன் - Uni5 EDUCATION**

## மஹாகவி சுப்ரமண்ய பாரதியார்

* பள்ளி மாணவர்களைக் கருத்தில் கொண்டு மஹானின் வாழ்க்கை வரலாறு இங்கே மீட்டுருவாக்கம் செய்யப்பட்டு அளிக்கப்படுகின்றது. இப்பாடத்தை நடத்தும் பெற்றோரும் ஆசிரியரும் பாரதியாரின் பாடல்களை இடையில் பாடினால் நலம்! மிகவும் உணர்ச்சியுடனும் சமயோசித புத்தியுடனும் இப்பாடத்தை உள்வாங்கிக் கொண்டு பாரதியாரின் வாழ்க்கையில் நாம் எங்கு நிற்கின்றோம் என்பதை மாணவர்கள் self-identification செய்து கொள்ளுதல் பலன் தரும்! மாணவர்களின் எதார்த்த வாழ்வியல் உதாரணங்களுடன் இணைத்து விளக்கம் தருக.
ஆசிரியர்கள்.

---

### பாடம் - 1
### பாரதியார் என்பவர் யார்?

இதோ இந்தப் படத்தில் இருக்கும் மனிதர் தான் பாரதியார். இவருக்கு இவரது பெற்றோர் வைத்த பெயர் சுப்ரமண்யம் என்பதாகும். சுப்ரமண்யம் என்ற சொல் முருகப்பெருமானின் பெயர் ஆகும். முருகனைப் போல் அழகிலும் அறிவிலும் பண்பிலும் தன் பிள்ளை இருக்க வேண்டும் என்ற உயர்ந்த எண்ணத்தில் இப்பெயரை வைத்தனர்.

**இவரைப் பற்றி நாம் ஏன் தெரிந்து கொள்ள வேண்டும்?**
வீட்டில் washing machine இருக்கிறது. அம்மா அதைப் பற்றி ஏன் தெரிந்து கொள்ள வேண்டும்? அது நமக்கு உதவுகின்றதுஉலகில் உள்ள ஒவ்வொரு ஜீவராசியும் தன்னால் முடிந்த சேவை [ப்ரதிபலன் பாராமல் பிறருக்கு உதவுதல்] செய்து வருகின்றது. கடலில் உள்ள பவளப்பாறைகள் கூட கடலின் உப்புத் தன்மையை ஒரே சீராக இருக்க உதவுகின்றது. உலகில் மிக உயர்ந்த உயிரினம் மனிதன் தான். அவனுக்கே ஆறாவது அறிவாகிய பகுத்தறிவு உள்ளது. அவன் தான் வாழும் பூமிக்கும் தன்னைச் சேர்ந்தவர்களுக்கும் தன்னைச் சார்ந்த பிற ஜீவன்களுக்கும் ஏதோ ஒரு வகையில் சேவை செய்தே ஆக வேண்டும். அதன் மூலம் தான் இயற்கையில் உள்ள சக்தி சமப்படும். அவ்வாறு பல மனிதர்கள் உலகத்திற்கு மிக

உயர்ந்த சேவைகள் பல செய்தனர், செய்தும் வருகின்றனர். அவர்களுள் ஒருவர் தாம் இந்த பாரதியார். அவரை நமக்கு ஒரு வழிகாட்டியாகக் கொண்டு அவரைப் பற்றிப் படிக்கிறோம்.

**இவர் உலகிற்கு என்ன செய்தார்?**

1.இவர் தனக்குள் இருக்கும் பாட்டு எழுதும், பாட்டுப் பாடும் திறமையை மிகச் சிறிய வயதிலேயே உணர்ந்தார்.

2.அத்திறமையை வளர்த்திக் கொண்டு பல பாடல்கள் எழுதினார்.

3.அப்பாடல்கள் மூலம் அக்காலத்தில் இருந்த பல தேவை இல்லாத பழக்க வழக்கங்கள், தீய சக்திகள் ஆகியவற்றை எதிர்த்தார்.

4.மக்கள் அவர் பாடல்களைப் படித்தும், பாடியும், கேட்டும் விழிப்புணர்வு பெற்றனர்.

5.அவர் பாரத தேசத்தின் விடுதலைக்குத் தன் வாழ்க்கையை அர்ப்பணித்தார். அதற்காக அவர் அரண்மனை வேலையை விட்டுவிட்டார். அதனால் அவரும் அவரது குடும்பமும் வறுமையால் மிகவும் கஷ்டப்பட்டனர்.

6.பத்திரிக்கைகள் மூலம் அவர் தன் பாடல்கள், கதைகள், கட்டுரைகள், கேலிச்சித்திரங்கள், கடிதங்கள் எனப் பல வழிகளில் தன் கருத்துக்களை எழுதி மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தினார்.

7.அதற்காக அவர் பணம்-காசு, பட்டம், பதவி என எதையுமே எதிர்பார்க்கவில்லை.

8. 38 வயதுக்குள் இவர் 100 வருடங்களில் செய்ய வேண்டிய பல சேவைகளை நமக்காகச் செய்து இவ்வுலக வாழ்க்கையை நிறைவு செய்தார்.[2 மணி நேரத்தில் செய்ய வேண்டிய வீட்டுப்பாடத்தை 1 மணி நேரத்தில் முடிப்பது போல]

**அவர் எப்போது எங்கே பிறந்தார்?**

தமிழ்நாட்டில் தெற்குப் பகுதியில் உள்ள திருநெல்வேலி மாவட்டத்தில் எட்டயபுரம் என்ற அழகிய ஊர் உள்ளது. அவ்வூரில் 1882, December 12 அன்று இவர் பிறந்தார்.இவருடைய அப்பா **ஸ்ரீ சின்னசாமி ஐயர்**. இவருடைய அம்மா **ஸ்ரீமதி லக்ஷ்மி**.பாவம் இவருக்கு ஒரு தங்கையும் பிறந்து சில நாட்களிலேயே இறந்து விட்டாள். அக்காலத்தில் இன்று உள்ளது போல குழந்தைகளைத் தாக்கும் வ்யாதிகளுக்கு vaccinations இல்லை. அக்குழந்தையின் பெயர் பாகீரதி. இதை விடப்

பாவம் பாரதியாருக்கு வெறும் ஐந்து வயதாகும் போதே அவர் அம்மா லக்ஷ்மியும் மரணம் அடைந்தார். அம்மா இல்லாத குழந்தையின் நிலை பாவம் அன்றோ? அப்பா தான் கண்ணும் கருத்துமாக வளர்த்தார்.

**பாரதியார் அம்மா இல்லாமல் எப்படி இருந்தார்?**

மிகச் சிறிய வயதில் அம்மா இறந்தவுடன் பாரதியார் மிக மிக கவலைப் பட்டார்.ஆனால் அம்மாவின் தம்பிகள் இரண்டு பேர் பாரதியாருடன் சதா வீட்டில் வாழ்ந்தனர். அவர்கள் பாரதியாரின் தாய்மாமன்கள். ஒருவர் **சாம்பசிவம்**. இவர் பாரதியாரை விட மூன்று வயதுப் பெரியவர். மற்றொருவர் **கைலாசம்**. இவர்களின் கூட்டணி கவலைகளை மறக்கச் செய்தது. மேலும் பாரதியின் பாட்டி [அப்பாவின் அம்மா] **பாகீரதி**க்கு அவர் மீது மிக்க அன்பு. எனவே கூட்டுக் குடும்பத்தில் எல்லோரும் அவரை அன்புடன் வளர்த்தனர்.அவரும் அனைவரையும் அன்புடன் மதித்து வளர்ந்தார்.

**அவர் அப்பா மறுபடியும் ஒரு கல்யாணம் செய்து கொண்டாரா?**

லக்ஷ்மி இறந்தவுடனே கல்யாணம் செய்து கொள்ளவில்லை. சில காலம் கழித்து **வள்ளி** என்பவரைக் கல்யாணம் செய்தார். அவர் பாரதியாரை மிகவும் அன்புடன் வளர்த்தார்.அவருக்கு ஒரு பெண் குழந்தை பிறந்தாள். அவள் பெயர் **லக்ஷ்மி**. பாரதிக்குத் தன் தங்கையை மிகவும் பிடிக்கும்.

## இவருடைய குடும்பத்தைப் பற்றிப் பார்ப்போமா?

**பாகீரதிப் பாட்டி**

பாரதியாரின் அப்பாவின் அம்மா. மிகவும் அன்பாக அனைவரிடமும் பழகும் குணம் கொண்டவர். அக்காலத்தில் இவர் தன் ஊரில் நடக்கும் திருவிழாவில் கலந்து கொள்ள வரும் பிற ஊர் ஜனங்களுக்கு வீட்டு வசாலில் தண்ணீர்ப் பந்தல் வைத்து சேவை செய்தார்.அதற்காகப் பல தூரம் சென்று ஆற்றில் இருந்து தண்ணீர் கொண்டு வருவது வழக்கம். இன்று போல் நினைத்த இதத்தில் எல்லாம் pipe fitting இல்லை. பாரதியாரின் அம்மா இறந்தவுடன் அவரை மிகவும் அரவணைத்தார். அவருடன் காசிக்குச் சென்று அங்கும் அவரைப் பார்த்துக் கொண்டார்.

**கடுவாய் சுப்பு ஐயர்**

இவர் பாரதியாரின் அப்பாவின் அப்பா. இவர் தம் சொந்த ஊர் கடுவாய் ஆகும். ஊர்ப் பெயரைச் சேர்த்து initial சேர்த்துக் கொள்வது தமிழகத்தின் மரபு.இவர்கள் வாழ்ந்த ஊர் திருநெல்வேலிக்கு அருகில் உள்ள மூன்று ஆறுகள் கூடும் மிக அழகிய சீவலப்பேரி ஆகும். அவ்வூரில் தளவாய் அரியநாத முதலியார் என்பவர் ஏழைகளுக்குத் தங்கும் - உண்ணும் இலவச சத்திரம் [inn and lodging] கட்டினார்.

அதன் பொறுப்பை சுப்பு ஐயர் ஏற்று நடத்தினார். அதனால் அவரை அவ்வூர் மக்கள் "சத்திரத்து சுப்பு ஐயர்" என்றே புகழ்வார்கள். மிகவும் உண்மையுடன் நேர்மையுடனும் சத்திரத்தை இவர் பராமரித்தார்.

**பகீரதிக்கும் சுப்பு ஐயருக்கும் குழந்தைகள் உண்டோ?**

இரண்டு குழந்தைகள் உண்டு. ஒருவர் ஸ்ரீமதி குப்பம்மாள். மற்றொருவர் தான் பாரதியாரின் அப்பா சின்னசாமி.ஸ்ரீமதி குப்பம்மாள் ஸ்ரீக்ருஷ்ணசிவன் என்பவரைக் கல்யாணம் செய்து கொண்டு வடபாரதத்தில் மிகப் புனிதமான காசி - பணாரஸ் - வாரணாசி மாநகரில் வாழ்ந்தார்.

**ஸ்ரீ க்ருஷ்ணசிவன் காசியில் என்ன செய்தார்?**

எட்டயபுரத்தை சிறிய மஹாராஜா வம்சம் ஆண்டு வந்தது. இவர்கள் British Government உடைய ஆரதவில் தங்கள் பகுதிகளை ஆண்டனர். எட்டயபுர சமஸ்தானத்துக்குக் காசியில் ஒரு மடம் இருந்தது. அம்மடம் காசிக்கு வரும் யாத்ரீகருக்குத் தங்க இடமும், உணவும் வழங்கி சேவை செய்தது. ஸ்ரீ க்ருஷ்ணசிவன் அம்மடத்தை நிர்வாஹம் செய்தார். அவர் மிகவும் அன்பும் நேர்மையான பண்பும் கொண்டவர். எட்டயபுர ராஜாவிடத்தில் மரியாதை மிகவும் கொண்டவர். பாரதியாரின் அப்பாவும் இறந்த பின் அநாதையாக ஆகாமல் இவரும் இவர் மனைவியும் பாரதியாரைக் காசிக்கு அழைத்துச் சென்று படிக்க வைத்து வளர்த்தனர்.இவர்கள் இல்லை என்றால் பாரதியாரின் வாழ்க்கையில் பல கஷ்டங்கள் ஏற்பட்டிருக்கும்.

**பாரதியாருக்குக் கல்யாணம் ஆனதா?**

அந்தக் காலத்தில் மிகச் சிறிய வயதில் கல்யாணம் செய்து விடுவார்கள். ஆனால் கல்யாணம் முடிந்தவுடன் பெண்ணையும் மாப்பிள்ளையையும் அவரவர் வீடுகளுக்குக் கூட்டிச் சென்று விடுவார்கள். அவர்கள் பெரியவர்களாகி, படித்து பொறுப்பு வந்தவுடன் வாழச் சேர்த்து வைப்பார்கள். ஆனால் இந்த வழக்கத்தால் பல நன்மைகளும் தீமைகளும் இருந்தன. பாரதியார் இக்குழந்தைக் கல்யாண முறையை எதிர்த்தார். தன் மகள்களுக்கு பெரியவர்கள் ஆனதும் தான் கல்யாணம் செய்தார்.

பாரதியாருக்கும் **செல்லம்மாள்** என்பவருக்கும் **15.6.1897** அன்று கல்யாணம் நிகழ்ந்தது.அப்போது பாரதியாருக்கு வெறும் 14 வயது தான். ஒரே பந்தலில் அவருடைய தங்கை லக்ஷ்மிக்கும் காசி மாமாவின் பெரியமகன் விஸ்வநாதனுக்கும் கல்யாணம் ஆனது. செல்லம்மாளின் தங்கை பார்வதிக்கும் காசிமாமாவின் சின்னமகன் கேதாரத்துக்கும் கல்யாணம் ஆனது.ஒரே நாளில்

மூன்று கல்யாணங்கள் நிகழ்ந்தன.

பாரதியாருக்கு இரண்டு பெண் குழந்தைகள் பிறந்தனர். அவர்கள் **ஸ்ரீமதி தங்கம்மாள்** மற்றும் **ஸ்ரீமதி சகுந்தலா**.இவர்கள் பிற்காலத்தில் மிகவும் வசதியுடன் வாழ்ந்தனர். அவர்கள் மூலம் வந்த சந்ததியினர் இன்றும் உலகில் பாரத தேசத்திலும், கனடா போன்ற நாடுகளிலும் வாழ்கின்றனர்.

**பாரதியாருக்கு நண்பர்கள் இருந்தனரா?**

உலகமே அவருக்கு நண்பர் தான். அவருக்கு இருந்த நண்பர்கள் பலர். சிலர் அவரை உற்ற நண்பனாக மதித்து அன்பு செய்தனர். சிலர் அவரை உயர்ந்த தேசப்பற்று கொண்ட வீரனாக மதித்தனர். சிலர் அவரை மஹாகவி என்று போற்றினர். சிலர் அவரை மஹான் என்றும் சித்தர் என்றும் வணங்கினர். சிலர் அவரை ஓர் அவதார புருஷராக எண்ணினர். ஆனால் பலர் அவரைப் புரிந்து கொள்ள முடியாமல் பித்தன்-பயித்தியம்-பிழைக்கத் தெரியாதவன் என்றே தூற்றினர், கேலி செய்தனர். ஆனால் அவர் அவற்றைக் கண்டு கொள்ளவே இல்லை.அவரது வாழ்க்கையின் ஒவ்வொரு நொடியும் அவரது ஆத்மார்த்த நண்பர்களின் உதவியாலேயே கழிந்ததைக் காணலாம்.

தேசத்துக்காகவும் மக்களின் முன்னேற்றத்துக்காகவும் தன்னையே அர்ப்பணித்து சேவை செய்யும் ஒருவரின் வாழ்க்கையில் இதைப் போலப் பலர் உதவுவர், தூற்றுவர்.,இது இயற்கையே! கடமை ஒன்றே முக்கியம் என்று பாரதியார் போன்றவர்கள் பணி செய்தனர்.

**<u>பயிற்சிகள்:</u>**

1.மாணவர்களின் பெயர்களையும் அதற்கு உரிய விளக்கத்தையும் ஆசிரியர் உணர்த்தும் பயிற்சி மிகவும் அவசியம். இதை என் மாணவர்கள் மிக மிக விரும்புவர். இதன் மூலம் பெயரிடும் பழக்கத்தின் பலனும் மொழி அறிவும் மேம்படுவதைக் காண்கிறோம்.

2.குழந்தைகளின் முன்னோர்கள் நாட்டிற்கு அவசியம் ஏதாவது சேவை செய்து இருப்பர். அதைப் பற்றித் தெரிந்து கொண்டு வரும்படு ஊக்குவிக்கவும். [என் கொள்ளுத்தாத்தா கோவையில் காந்தியின் சத்யாக்ரஹ இயக்கத்துக்கு துணை செய்தார். அதன் அடையாளமான அக்கால தேசியக்கொடி இன்னும் என் வீட்டில் உள்ளது.]

3.பாரத தேசத்தின் விடுதலைப் போரில் குழந்தைகளின் மூதாதையர் பங்கு

கொண்டதைப் பற்றி ஆராயச் சொல்க. [சென்னையில் இதைச் செய்கையில் சுபாஷ் சந்த்ர போஸுடன் கடிதத் தொடர்பு வைத்து இருந்த ஒரு மனிதரின் கடிதம் கிடைத்தது]

4.நமக்கு நீண்ட ஆயுள்-ஆரோக்யம் இருக்கும் பட்சத்தில் என்ன செய்வோம் என்ற கட்டுரை \ கலந்துரையாடல் \ சொற்பொழிவு நிகழ்த்துக.

5. 1882 முதல் இன்று வரை கடந்துள்ள கால அளவை மாணவர்கள் calculate செய்வது நல. அதில் தாங்கள் எந்த ஆண்டில் பிறந்தனர் என்று link செய்வது மிகவும் நன்று. அப்போது தாங்கள் எந்த அளவுக்கு பாரதியாருடன் காலத்தால் தொடர்பு பட்டி இருக்கிறோம் என்று உணரவும் உதவும்.

6. குடும்ப பாரம்பரிய மரம் வரைந்து கொண்டு வருக. எத்தனை தூரம் முன்னோர்களை அறிய முடியுமோ அறிய ஊக்குவிக்கவும். கையோடு ஒவ்வொருவரிடமும் உள்ள உயர்ந்த குணங்களைப் பட்டியல் இட்டுக் கொண்டு பேசலாம். [என் கொள்ளுத்தாத்தா கோவை மாநகரில் பல கோயில்களுக்கு இறைவன் எழுந்தருளும் வாஹனங்கள் செய்து அர்ப்பணித்துள்ளார், என் அம்மாவின் அம்மா மிகவும் அழகாகக் கோலம் மூலம் இறைவனின் உருவங்களை வரைவார். அதைக் காண ஊரில் பலர் வருவர், பத்திரிக்கைகளிலும் அவை வந்துள்ளன]இதன் மூலம் குடும்ப வேர்களும், தான், தன்னிடம் உள்ள குணங்கள் தன் குடும்பத்தின் மூலம் தான் வருகிறது என்பதைக் குழந்தை அறிய முடியும்.

7. ஊர்ப்பெயர், குலப்பெயர், வீட்டின் பெயருடன் கூடிய தன் குடும்பப் பெயர்களை எழுதி வரச் சொல்லவும்.அதற்கு விளக்கம் தரவும்.இதன் மூலம் அக்காலத்தில் மிக எளிதாக யார் எந்த ஊர், எந்த வீடு, எவர் மகன் என்று தெரிந்து கொள்ள முடியும். கேரளத்தில் இன்றும் குல இல்லத்தின் பெயரைக் கொண்டு initial அமைவதை எடுத்துக் காட்டுக.